## பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 34-2022*

கல்வியாண்டின் தொடக்க நாள் 20.08.2022 அன்று மிகவும் சிறப்பாக ஆடிக்கூழுடன் அனைவரும் மகிழும் வகையில் இடம்பெற்றது. வகுப்புப் பிரதிநிதிகள் தெரிவு இடம்பெற்றது. இன்னும் இரண்டு வகுப்புகளுக்கான பிரதிநிதிகள் தெரிவுசெய்தபின்பு புதிய பெற்றோர்குழுவிற்கான தெரிவு இடம்பெறும். பாடசாலை தொடக்க நாளன்று ஆடிக்கூழ் தயாரிக்க உதவிய அனைத்து பெற்றோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு:** *வளாகத்தில் எந்த ஒரு நிகழ்வுபற்றி அறிவித்தல் வெளியிடுதல், நிகழ்வுசார்ந்த பதிவுகளை வெளியிடுதல் அல்லது வளாகத்தின் பெயரைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைச் செய்யமுன் நிர்வாகத்தின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்பதனை மீண்டும் மீண்டும் நினைவூட்டுகின்றோம்.*

2022 - 2023 இல் வளாகத்தை வழிநடாத்தும் நிர்வாக உறுப்பினர்கள் விபரம்.
*வளாகப் பொறுப்பாளர்:* திருமிகு. வித்யாதரசர்மா இராதாகிருஷ்ணராஜாக்குருக்கள்
*உதவி வளாகப் பொறுப்பாளர்:* திருமிகு. கேதீஸ்வரன் சரவணை
*கல்விப்பொறுப்பாளர்:* திருமிகு. சாந்தசொரூபி சந்தநிகேதன்
*உதவிக் கல்விப்பொறுப்பாளர்:* திருமிகு. தேவாம்பிகை விமலசேனன்
*கலைப்பொறுப்பாளர்:* திருமிகு. துராதரன் கணேசமூர்த்தி
*நிதிப்பொறுப்பாளர்:* திருமிகு. யூட் இமானுவேல்பிள்ளை
*அலுவலகப்பொறுப்பாளர்:* திருமிகு. தனுசியா செ்ன் யோன்ஸ்
*உதவிக் கலை & உதவி அலுவலகப்பொறுப்பாளர்:* திருமிகு. காத்தியா மோஜகன்ராஜ் ஆகியோர் தங்களது சிறப்பான பணிகளைச்செய்ய ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் அங்கத்தவர்களின் சிறந்த ஒத்துழைப்பினை எதிர்பார்க்கின்றோம்.

27.08.2022 முதல் தொடர்ந்து சனிக்கிழமைகளில் பாடசாலை வழமைபோல்
மழலையர் & சிறுவர்நிலை வகுப்புகள் 09:30 - 12:00 வரையும்
1ஆம் வகுப்பு - 11ஆம் வகுப்பு வரை 09:30 - 12:30 வரையும்
இடைவேளை நேரம் 10:45 - 11:15 வரையும்
கலைவகுப்புகள் 12:45 - 13:30 வரையும் நடைபெறும். மாற்றங்கள் இருப்பின் வகுப்பாசிரியர்கள் அறியத்தருவார்கள்.

எதிர்வரும் 27.08.2022 சனிக்கிழமை பாடசாலையில் பாடப்புத்தகங்கள் வாங்கலாம். அன்றும் புதிய மாணவர்களைப் பதிவுசெய்ய ஏற்பாடு செய்யப்படும்.

03.09.2022 அன்று உறுப்பினர்களுக்கான தகவல் சந்திப்பு (பெற்றோர் கூட்டம்) இடம்பெறும்.

**ஆசிரியர்பணிபுரிவதற்கு ஆர்வமுள்ளவர்கள் தேவை**
அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் லோறன்ஸ்கூக் வளாகத்தில் ஆசிரியர் பணிபுரிவதற்கு பெற்றோர், பாதுகாவலர் மற்றும் வளாக நலன்விரும்பிகளிலிருந்து ஆர்வமுள்ள இருவர் தேவைப்படுகின்றனர். விரைவில் தேவை என்பதனால் எதிர்வரும் 31.08.2022 இற்கு முன்னதாக வளாக மின்னஞ்சலுக்குத் எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பிப்பவரின் சுயவிபரம் மற்றும் இப்பணிக்கான ஆர்வம் பற்றிய கண்ணோட்டம் என்பனவற்றை இவ்விண்ணப்பத்துடன் இணைக்கவும்.

**அறிவாடல் 2022 - அனைத்துலக மாணவர்களுக்கான இணையவழி அறிவாடல் போட்டி.**
விபரங்கள் அனைத்து வைபர் குழுமங்களிலும் கோடைகால விடுமுறைக்கு முன்னதாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
இதற்கான கேள்வி விடைகள் அனைத்து வகுப்புகளுக்கான இணையமுற்றத்தில் (Teams) இணைக்கப்பட்டுள்ளது. அனைவரும் அதனைப் பதிவிறக்கம் செய்து தங்களின் பிள்ளைகளுக்கு அதனைப் பயிற்சிசெய்யவும்.

**நிதி**
2022 ஆம் ஆண்டிற்குரிய முதலாவது கட்டணத்தகவல்கள் (faktura vår-2022) தங்களுக்கு மின்னஞ்சலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இனிவரும் கட்டணங்களைச் செலுத்தும்போது அடையாள (KID) இலக்கங்களுடன் செலுத்தல் அவசியமானது. தங்களுக்கு post@centiga.com என்ற முகவரியிலிருந்து கட்டணத்திற்கான தகவல் கிடைத்திருக்கும். இன்னும் கிடைக்காதவர்கள் தங்கள் மின்னஞ்சல் பகுதியில் அனைத்து தபால் பகுதிகளிலும் தேடவும்.

2021 மற்றும் அதற்கு முன் உள்ள கட்டணங்களை இன்னும் செலுத்தாதவர்கள் விரைவில் செலுத்தும்படி வேண்டுகின்றோம். 2ஆம் வகுப்பு மாணவர்களின் பெயருக்குரிய 2021 இற்கான கட்டணத் தகவல் கோடைகால விடுமுறைக்கு முன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
இதுவரை கட்டணங்களைச் செலுத்தாதவர்களுடன் நாம் விரைவில் தொடர்புகொள்வோம்.

*எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.*

நன்றி!

தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!

நிர்வாகம்
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்